**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 361/2015**
**U/s. 379 IPC**
**PROSECUTION WITNESS NO. 8 (LW. 10)**

| | | |
|---|---|---|
| **Name** : திரு. ராஜேந்திரன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

எதிரி ஆஜர் இல்லை.**355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. Split up CC No. 76/2026**
**(VC** மூலம் சாட்சியம் அளிக்கப்பட்டது**. )**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 361/2015 19.06.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 4.45**

**<u>முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.கடந்த 29.10.2015 ம் தேதி 9.30 மணியளவில் உதவி ஆய்வாளர் விஜய் நிலைய பொறுப்பிலிருந்தபோது கண்ணன் என்பவர் கொடுத்த புகார் மனுவினை , பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 20.30 மணியளவில் தஞ்சாவூர் No. 1 வல்லம் சாலை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய விளையாட்டு மைதானத்தின் No. 1 வல்லம் சாலை அருகில் சம்பவயிடத்தை மின்விளக்கு வெளிசத்தில் சாட்சிகள் தர்மேந்திரன் , சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 7 , மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 8 ஆகும்**. பின்பு மகஜர் சாட்சிகள் மற்றும் இதர பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு எதிரிகளை தேடி வந்த நிலையில் கிடைத்த ரகசிய தகவலின் படி 31.10.2015 ம் தேதி விளார் பைபாஸ் , புதுஆற்றுபாலம் அருகிலுள்ள பெட்ரோல் பங்க் எதிரில் போலீஸ் பார்டி சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரிகள் சம்மந்தமப்பட்ட காணாமல்போன கிட்டாச்சி EX 120 செயின்உள்ள மண் வெட்டும் இயந்திரத்தை , லாரியில் ஏற்றி ஓட்டிவந்தவர்களை விசாரித்தபோது, அவர்கள் தாமாக குற்றத்தை ஒப்புக்கொண்டனர். பின்பு அவர்களை காரணம் 17.00 மணிளயவில் கைது செய்து, எதிரிகள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை தனிநபர் சாட்சிகள் எவரும் இல்லாததால் கிராம நிர்வாக அலுவலர் திரு. செந்தில்குமார், கிராம நிர்வாக உதவியாளர் திரு. சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தும், அவர்களிடமிருந்து லாரி TN 28 A 8788 எனும்

கிட்டாச்சி இயந்திரம் –1 அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியும் எதிரி மற்றும் வழகது சொத்துடன் நிலையம் வந்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். **1 வது எதிரி சேட்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 9 , கைப்பற்றுதல் மகசர் அசாஆ 10, படிவம் 91 (கிட்டாச்சி இயந்திரம் ) அசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 வது எதிரி செல்வம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 12 கைப்பற்றுதல் மகசர் அசாஆ 13, படிவம் 91 (லாரி ) அசாஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிபி நம்பர் 356/2015 மற்றும் சிபி நம்பர் 357/2015 ஆகும்.**

4 . பின்பு இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு. விஜய் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து கொண்டு மேற்படி எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது மேற்படி இதச பிரிவுகளின் படி 25.11.2015 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

**1.**இவ்வழக்கின் முதல் தகவல் மற்றும் முதல் புகார் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சம்பவ தேதி 15.10.2015–18.10.2015 என்றால் சரிதான். புகார் கொடுக்கபட்ட தேதி 29.10.2015 என்றால் சரிதான். புகார் காலதாமதாக கொடுக்கப்பட்தற்கான தனிபட்ட காரணங்கள் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. வாகனம் கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் தேதி 31.10.2015 என்றால் சரிதான். வழக்கு சம்மந்தப்பட் கிட்டாச்சி வாகனத்தை ஒரே இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்து செல்லல வேண்டுமென்றால் பெரிய வாகனத்தை பயன்படுத்த வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட கிட்டாச்சி வாகனத்தை எடுத்து சென்றதாக சொல்வதற்கு பயன்படுத்தப்பட்ட பெரிய வாகனம் எதுவும் கண்டுபிடிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் வாகனத்தை வாடகைக்கு விடப்பட்டதற்கான வாடகை ஒப்பந்த பத்திரம் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும், மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்திற்கு இடைபட்ட துாரம் 5 கிமீ இருக்கும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு சொன்ன நாள் , நேரம் , இடம் விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், அவர்களிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் வழக்கு சம்மந்தப்பட்ட வாகனம் எதுவும் கைப்பற்றடபவில்லை என்றால் சரியல்ல. மகசரில் வாகனம் கைப்பற்றபட்டதாக சொல்லப்பட்டுள்ள இடம் தஞ்சாவூர் பைபாஸ் புது

ஆற்றுபாலம் அருகில் பெட்ரோல் பங்க் எதிரே என்றால் சரிதான். வாகனம் கைப்பற்றிய இடத்தை குறிப்பிட்டுசொல்லவில்லை என்றால் சரிதான். கைது குறிப்பாணையில் காலம் 2 ல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 29.10.2015 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். 31.10.2015 ம்தேதி மாலை 5.00 மணிக்கு கைது செய்யப்பட்டுள்ளதாக சொன்ன எதிரிகள் 1.11.2015 ம்தேதி காலை 6.00 மணிக்கு தான் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். கைது செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிமீ இருக்கும் என்றால் சரிதான். தவறாக எதிரிகள் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல்அறிக்கைக்கு ஏற்றாற்போல் சாட்சிகளை விசாரணை செய்யாமல் , எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சிசிடிவி கேமரா பதிவுகள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தப்பட்ட கிட்டாச்சி வாகனம் நிறுத்திருநதாக சொல்லப்படும் இடத்தின் அருகேயுள்ள சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும்இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனத்தின ஆர்சி புத்தகம் போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், பார்வை மகசர் மற்றும் வரைப்படம் போன்ற வழக்கு ஆவணங்கள் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் - S.T. கனிமொழி.,

நீதித்துறை நடுவர் எண்–I,

தஞ்சாவூர்.